## R 5158 How Righteous Character is produced

# நீதியான குணலட்சணம் எப்படி உருவாக்கப்படுகிறது

நமது சித்தம் நமது தேர்வைக் குறிக்கிறது. ஆனால் நமது தெரிவு என்பது நம்மை சுற்றியுள்ளவைகளின் மேல் நமது உணர்வையும் தீர்மானத்தையுமே அதிகமாக சார்ந்துள்ளது. ஒரு குழந்தை ஒரு கூரான கத்தியையோ அல்லது ஒரு நெருப்பையோ தொட்டு வெட்டுக் காயத்தையோ அல்லது தீக்காயத்தையோ பெறுவதைப் போல, நமது சித்தம் சில சமயங்களில் நமக்கு நன்மை பயக்காத காரியங்களை கிரகிக்கிறது. நமது கர்த்தரின் சத்தத்தை நாம் முதலாவது கேட்டதிலிருந்து நமது சித்தத்தைப் பற்றிய கற்றறிதல் முன்னேற்றத்தைப் பெறுகிறது. ஏனெனில் அவர்களது சிந்திக்கிற முறைகளும் அவர்களது கருத்துக்களும் மற்றும் அவர்களது தெரிவுகளும் குறையுள்ளதாக இருக்கின்றன.

தேவனுடைய குணலட்சணங்கள் மற்றும் தெய்வீக திட்டம் போன்றவைகளில் நமது அறிவுடன் நமது மனதின் வலிமையும் பெருகுகிறது. அவரது பூரணத்தை வார்த்தையானவராக (Logos) மற்றும் மனிதன் கிறிஸ்து இயேசுவாக நாம் நினைக்கும் போது, நமது சொந்த அபூரணத்தை ஓரளவுக்கு உணர முடிகிறது. மேலும் அது முதல் நமது அபூரண தீர்மானத்தை சார்ந்தவைகளை நீக்கும்படி நாடுவோம். அவர் "பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்" என்பதையும் அவர் பரிபூரணர் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்கிறோம். மேலும் அவர் அர்ப்பணம் செய்த மனத்துடன், நெருக்கமான பாதையில் அவரது வாழ்க்கையின் அனுபவத்தினால் முக்கியத்துவம் அடைந்த அவரது சரியான சித்தத்துடனும் சமநிலையான மனதுடன் நுழைந்தார். நமக்கு முன்னால் அவரது பூரணமான உதாரணத்துடன், நமது சித்தத்தை தெய்வீக சித்தத்துக்கு இசைவாக பயிற்றுவிக்கும்படி அனுதினமும் நாம் நாடுகிறோம்.

சித்தம் என்பது மனதின் குணங்கள் அல்லது சாமார்த்தியத்தின் ஒரு குறிப்பிட்ட இணைப்பின் பலன்கள் ஆகும். ஆகையால் நாம் நமது மனதின் குணங்களின் வேறுவித இணைப்புகளின் மூலம் நமது சித்தத்தை மாற்றலாம். உதாரணமாக, மனதின் ஒரு குணம் செல்வம் சேர்க்கும் பேராவல் ஆகும். மனதின் மற்றொரு குணம், நீதி, மற்றொன்று சங்கீதம், மற்றொன்று கலை இன்னும் பல.

ஒருவரிடம் நீதி என்னும் குணம் குறைவாக இருந்து செல்வம் சேர்க்கும் குணம் அதிகமாக இருந்தால் அது அவரை திருடுவதற்கு வழி நடத்தும். இது தவறான செயல் என்று கூறுவதற்கு அவரிடம் நீதி என்கிற குணம் இல்லாதிருக்கும். சிலர் பணத்தை எடுத்துக் கொள்ள தூண்டப்படலாம் அல்லது அன்பை திருப்திப்படுத்த நேர்மையற்ற எதையாகிலும் செய்யலாம். அதேபோல் சங்கீதம் போன்றவைகளுக்காகவும் அநீதி செய்யலாம். மாறாக ஒருவரிடம் நீதி என்கிற குணம் அதிகமாக இருந்தால் அது அவரை கட்டுப்படுத்தும். இந்த குணம் முழுமையாக விழிப்படைந்து அப்பியாசத்துக்கு கொண்டு வரப்பட்டால் அவர் இப்படியாக கூறுவார்: "இல்லை, திருடுவது தவறு. இந்த காரியத்தில் கொள்கைகள் மதிக்கப்படவேண்டும்." இப்படியாக அவரது விருப்பமானது கொள்கைகளுக்கு எதிராக சந்தோஷப்படுத்தப்படுவதில்லை.

ஒருவரது நன்னடத்தையை கட்டுப்படுத்தும் உறுப்புகள் மூலமே ஒருவரது சித்தம் உருவாக்கப்படுகிறது. சுயநலம் என்கிற இயற்கை குணம் ஆளுகை செய்தால், அவர் சுயநலமுள்ளவனாக இருப்பார். சிலரிடம் மனசாட்சி என்கிற உறுப்பு செயலற்று இருக்கும். இவர்கள் தங்கள் செயல்பாடுகள் மற்றவர்களை எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதை சிந்தியாமல் தங்களது உத்தேசத்தின்படி மிருகங்களைப் போல செயல்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அர்ப்பணத்தில் தங்களது இருதயத்தை கர்த்தரிடம் கொடுப்பார்களானால், அவர்களது வாழ்க்கை முறையில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாக இருக்கும். அவர்கள் போதனைக்கு தேவனுடைய வசனத்தை ஆராய்வார்களானால், அவர்களது நடக்கைகளில் தேவன் சந்தோஷப்படவில்லை என்பதை வேத வசனங்கள் அறிவிக்கும். இந்த தகவலின் பலனால் தங்களது சிந்தனைகளையும், வார்த்தைகளையும் செயல்களையும் சோதித்து பார்க்க கற்றுக்கொள்ள ஆரம்பிப்பார்கள்.

### மனசாட்சி குணலட்சணத்திற்கு பலத்தை கொடுக்கிறது

ஒருவர் அதிக அளவில் பயபக்தியும், அதிக அளவில் தெய்வீக தன்மையும், அதிக அளவில் மனசாட்சியும் உடையவர், மிகவும் குறைவான பயபக்தியும், குறைவான தெய்வீக தன்மையும், குறைவான மனசாட்சி உடையவரைக் காட்டிலும் பெரிய அளவில் அனுகூலம் உடையவராக இருக்கிறார். ஏனெனில் வெவ்வேறு காரியங்கள் வரும்போது இந்த மூன்று மனோசக்தியும் சுபாவத்தின்படி ஏற்றுக்கொண்டு "இது சரி" (அல்லது தவறு சங்கதியைப் பொறுத்து) என்று கூறும். காரியம் சரியாக இருக்கும்போது, தீர்மானம் "இது சரியான காரியம்" என்று கூறும். இப்படிப்பட்ட குணமுடையவர்கள் தாங்கள் சரி என்று நினைக்கிற எதற்காகவும் தியாகிகளாகவும் ஆகக் கூடியவர்களாக இருப்பார்கள். ஏனெனில் நீதியான குணலட்சணத்திற்கு உந்து விசையை கொடுக்கக் கூடிய மூன்று மனதின் குணத்தில் அவர்கள் மிகவும் பலமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

குறைவான மனசாட்சியை பெற்றிருப்பவர்கள் இந்த குணலட்சண பலத்தில் மிகவும் குறைவுள்ளவர்களாக இருப்பார்கள். வலிமையை எந்த திசையில் அப்பியாசப்படுத்தினாலும் அது பலமான குணலட்சணத்தை உருவாக்குகிறது; கெட்ட சித்தம் கெட்ட குணலட்சணம், நல்ல சித்தம், நல்ல குணலட்சணம். பிறப்பினால் நாம் எப்படி இருக்கிறோமோ, அதுவும் நமது குணலட்சணத்திற்கு ஓரளவுக்கு பங்கு வசிக்கிறது. நமது அர்ப்பணத்திற்கு பிறகு தேவன் நமக்கு போதிக்கிறார். தவறுக்கு பதிலாக சரியானதை செய்யும் மனதை பெறும்படி நமது சிந்தை புதுப்பிக்கப்பட்டு மறுரூபமாகிறோம். இது சித்தம் உருவாகிறதற்காக மனதை சரிபண்ணுதல் ஆகும்.

வலிமையான சித்தம் மற்றும் வலிமையான குணலட்சணம் உருவாக நாம் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டும். நமது குணலட்சணத்தை பலவீனப்படுத்தும் அனைத்தையும் நீக்கிவிட வேண்டும். தங்கள் குணலட்சணத்தை வலிமைப்படுத்துகிறவர்கள், தாங்கள் நினைப்பது தேவனுடைய சித்தம் என்று நியாயப்படுத்துகிறார்கள். அவர்கள் நினைப்பது செய்ய வேண்டிய சரியான காரியம் என்று நியாயப்படுத்துகிறார்கள். பிறகு அதை செய்ய தீர்மானிக்கிறார்கள். அவர்களது நோக்கத்தை நிறைவேற்ற எந்த இடையூறும் இல்லாதபடி பார்த்துக் கொள்கிறார்கள். வலிமையான, நல்ல சித்தத்தை உடையவர்கள் வாழ்க்கையில் வரும் ஒவ்வொரு கஷ்டம் மற்றும் சோதனையில் உதவியை பெறுவார்கள்.